# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.23 (L.W.45)

| | | | |
|---|---|---|---|
| Name | : E.K.Krishnan | Caste | : BC Sengundar |
| Father's Name | : E.E.Kuppuswamy | Calling: | Retired Deputy Tahsildar |
| Village | : Podatturpet | Religion | : Hindu |
| Taluk | : Pallipet | Age | : 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.01.2025.

(A1 to A6 present)

**முதல் விசாரணை**

நான் அரக்கோணம் தாலுக்காவில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து கடந்த 31.03.2023 அன்று ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2015 அன்று வேலூர் தாலுக்கா அலுவலகத்தில் வேலூர் வடக்கு வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்தேன்.

04.07.2015 அன்று வேலூர் வட்டாடச்சியர் அவர்கள் எனக்கு ஒரு சுற்றறிக்கை கொடுத்து, 06.07.2015 அன்று சி.பி.சி.ஐ.டி காவல் அலுவலகத்தில் ஆஜராகும்படி அறிவுறுத்தினார். மேற்படி போலிசார் சொல்லும் அலுவலர் சார்ந்த விஷயங்களை செய்யச் சொன்னார்.

06.07.2015 அன்று காலை 10 மணிக்கு நான் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் ஆஜரானேன். நான், என் அதிகார வரம்பில் வேலை செய்யும் கிராம நிர்வாக அலுவலர் திரு.விஜய் ஆகிய இருவரும் ஆஜரானோம். அங்கிருந்த டி.எஸ்.பி. அனந்தகுமார் என்பவர், அவரை எனக்கு அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அப்போது கு.எண்.5/2015 பிரிவு 176 வழக்கை மார்ட்டின் பிரேம்ராஜ்க்கு எதிராக பதியப்பட்ட வழக்கில் அவர் தங்கியருக்கும் காவலர் குடியிருப்பை வீட்டு சோதனை செய்யவேண்டும் என்றும், அதன் எஸ்.ஐ. குவார்ட்ட்ர்ஸ் எண்.2/12 சோதனை செய்யவேண்டும் என்றும், அவருடன் நான் வரவேண்டும் என்றும் என்னை அழைத்தார். நானும், என்னுடைய கிராம நிர்வாக அலுவலரும் அவருடன் சென்றோம்.

நேராக பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்றோம். அப்போது அந்த காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் இல்லை. அந்த காவல் நிலையத்தில் காவல் எழுத்தர் இருந்தார். அவர் பெயர் முத்துக்குமார்.

இத்தருணத்தில் சிறப்பு அரசு வழக்கறிஞர் அந்த நபரின் பெயர் முத்துக்குமரன் என்று உச்சரித்ததை சாட்சி சுதாரித்துக் கொண்டு அந்த நபரின் பெயர் முத்துக்குமரன் என்று சொல்கிறார்.

காவல் நிலையத்திலிருந்து சுமார் 500 மீட்டர் தள்ளி எஸ்.ஐ. குவார்ட்ர்ஸ்க்கு வந்து, என்னுடன் வந்த காவல் எழுத்தர் முத்துக்குமரன் அந்த வீட்டின் பூட்டை திறந்து வழிவிட்டார். அது பழைய நாட்டு ஓடு போட்ட வீடாகும். அதில் ஒரு Hall மற்றும் ரூமும் இருந்தது. அதில் கிச்சன் இல்லை.

11.30 மணிக்கு சோதனை செய்ய என் முன்னிலையிலும், வி.எ.ஒ. சார் முன்னிலையிலும் ஆரம்பித்தார்கள். 11.30 மணியிலிருந்து 12.45 மணி வரை சர்ச் செய்தார்கள். 10 ஆவணங்கள் எடுத்தார்கள்.

முதலில் 2 டைரி எடுத்தார்கள். அதில் 2014 ல் ஒரு டைரியும், 2015 ல் ஒரு டைரியும் எடுத்தார்கள். 2014 ல் எடுத்த டைரி பச்சை கலர். 2015 ல் எடுத்த டைரி மெருன் கலர். இரண்டு நோட் பேடு எடுத்தார்கள். அதன்பின்னர் சிவப்பு செல்போன். அந்த செல்போன் எடுத்து சிம் கழட்டினார்கள். டாட்டா டெகோமோ சிம் ரிலயன்ஸ் சிம் செல்லிருந்து எடுத்தார்கள்.

அதன்பின்னர் 4 சிம்கார்டு எடுத்தார்கள். 2 சிம்கார்டு ஏர்டெல், 2 சிம்கார்டு ரிலியன்ஸ். அதன்பின்னர் ஒரு மெமரி கார்டு எடுத்தாரி்கள். பின்னர் மணி என்பவருடைய கைப்பட எழுதிய பார்ம் மற்றும் இன்னொரு நபரின் கைப்பட எழுதிய பார்ம் எடுத்தார்கள். அந்த நபரின் பெயர் ஞாபகம் இல்லை. ஆக 10 ஆவணங்களை எடுத்தார்கள்.

சோதனை பட்டியல் தயார் செய்து, என்னிடமும், வி.எ.ஒ.விடமும் கையெழுத்து வாங்கினார்கள். சோதனை பட்டியலில் எல்லா பொருட்களையும் 10 பொருட்களை பதிவு செய்து, என்னிடமும், வி.எ.ஒ. விடமும் கையெழுத்து வாங்கினார்கள்.

முதலில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பின்னர் வி.எ.ஒ. விஜய் சார் அவர்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். அந்த மகசரில் முத்துக்குமரன் சாரும் கையெழுத்து போட்டார். சோதனைப்பட்டியலில் உள்ள கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ.40. பக்கத்தில் உள்ள வி.எ.ஒ. விஜய் உடையது.

கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. 2 வது கையொப்பம் வி.எ.ஒ. விஜய் உடையது. 3 வது ஆக DSP கையெழுத்து போட்டார். அதன்பின்னர் முத்துக்குமரன்

கையெழுத்து போட்டார். மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.41.

2014 ம் வருடத்திய பச்சை கலர் டைரி அ.சா.ஆ.42.

2015 ம் வருடத்திய டைரி அ.சா.ஆ.43.

பச்சை கலர் நோட் பேடு அ.சா.ஆ.44

மற்றொரு நோட் பேடு அ.சா.ஆ.45.

செல்போன் மற்றும் சிம்கார்டில் இருந்த மூடிய முத்திரையுடன் காணப்பட்ட ஒரு அட்டை பெட்டி திறந்த நீதிமன்றத்தில் விசாரணையின்போது உடைக்கப்பட்டது.

செல்போன் சா.பொ.1

நான்கு சிம்கார்டுகள் சா.பொ.2 வரிசை

இரண்டு Pen drive சா.பொ.3 வரிசை

ஒரு மெமரி கார்டு சா.பொ.4

மேற்படி செல்போன் சா.பொ.1 ஐ திறந்து பார்த்ததில் அதில் 2 சிம்கார்டுகள் உள்ளே பொருத்தப்பட்டுள்ளன.

சொத்துக்களை குறியீடு செய்தபோது, அதிலிருந்த மெமரி கார்டுகள் தனித்தனியாக இருந்தன. தனியாக இருந்த இரண்டாவது மெமரி கார்டு சா.பொ.5 ஆக குறியீடப்படுகிறது.

என்னுடைய அலுவல் சார்ந்த சான்றிதழ் வழங்கும்போது நான் தமிழில் கையொப்பம் போடுவேன். மற்றும் வங்கி சம்மந்தப்பட்ட காசோலை விண்ணப்பம் போன்ற விஷயங்களுக்கு மற்றும் தனிப்பட்ட விஷயங்களும் ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவேன். இவ்வாறான சூழ்நிலையில் தாசில்தார் எனக்கு கொடுத்த சுற்றறிக்கையில் ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டு பெற்றேன்.

என்னை CBCID DSP அவர்கள் விசாரித்தார்.

**1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தமிழிலும், ஆங்கிலத்திலும் கையெழுத்து போடுவேன் என்ற விவரத்தை CBCID விசாரணையில் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லவில்லை. சுற்றறிக்கை என்பதை இந்நீதிமன்றத்தில் எடுத்து காட்டினார்களா என்றால் ஆமாம். சுற்றறிக்கையின் நகலை எனக்கு கொடுத்தார்கள். சுற்றறிக்கையை வி.எ.ஒ. அவர்களுக்கும் தாலுக்கா அலுவலகத்தில் கொடுத்தார்கள்.

பொதுவாக தங்கியிருக்கும் வீட்டில் கிச்சன் இருக்குமா, இருக்காதா என்றால் தங்கியிருக்கும் குவார்ட்டர்ஸில் இருக்காது. முத்துக்குமரன், தங்கியிருக்கும் வீட்டை காட்டினார். ஒரு அரசு ஊழியருக்கு குவார்ட்டர்ஸ் கொடுத்து தங்கியிருக்க சொன்னால் அதை கொடுப்பதற்கான என்ன விதிமுறைகள் என்றால் அது எனக்கு தெரியாது.

அவர் வீடு வடக்கு பார்த்தவாறு இருந்தது. அதற்கான வரைபடங்கள் எதுவும் வரையப்படவில்லை. இந்த ஒரு குவார்ட்டர்ஸ் தனியாக இருந்தது. அதன் எண்.2/12 என்பது எங்கு எழுதியிருந்தது என்றால் வாசல் பக்கத்தில் எழுதப்பட்டிருந்தது. அதனை போட்டோ எடுக்கவில்லை. எண்.2/12 என்ற குவார்ட்டர்ஸ் என்பதற்கான எந்த ஆவணமும் நிலையத்தில் பார்க்கவில்லை. எதுவும் அவர்கள் பேசவில்லை.

பூட்டு என்ன கலரில் தொங்கிக்கொண்டிருந்தது வெள்ளை கலரா, மஞ்சள் கலரா என்றால் நான் அதை பார்க்கவில்லை. பூட்டை திறந்தது பற்றி மகசரில் எழுதினார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பூட்டு Godrej பூட்டா, என்ன பூட்டு என்றால் எனக்கு தெரியாது.

அரசு அதிகாரியாக உள்ள நான், வீட்டை சோதனை செய்ய போகும்போது, நீதிமன்றத்தில் அனுமதி பெற்றீர்களா என என்னை அழைத்து சென்ற போலிஸ் அதிகாரியிடம் கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை.

கைப்பற்றிய 10 ஆவணங்களை குறித்து ஒரு பேப்பரில் எழுதினார்கள். டேபிளில் பேப்பரை வைத்து சொல்ல, சொல்ல எழுதினார்கள். முதலில் பேப்பரில் எழுதினார்கள். பின்னர் மகசரில் எழுதப்பட்டது.

அ.சா.ஆ.41ல் மகசர் மட்டும் தான் உள்ளது. நீங்கள் 10 ஆவணங்கள் என்ன என்ன என்றால் 2 டைரி, 2 நோட் புக், 4 சிம்கார்டு, ஒரு செல்போன், ஒரு மெமரிகார்டு, ஒரு பென்டிரைவ் ஆகும். மணி, முனிராஜீலு என்பவர் எழுதிக்கொடுத்த பேப்பர்.

அ.சா.ஆ.43 டைரி என்ன கலர் என்று சாட்சியிடம் கேட்டபோது, சாட்சி அந்த டைரியின் முகப்பு அட்டை திரும்பி உள்புறம் ப்ரௌன் கலரில் உள்ளது என்றும், அந்த மெருன் கலர் டைரியை தான் அந்த இடத்தில் பார்த்ததாக சொன்னார். அதன்பின்னர் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அந்த டைரி மூடி மேல்புறத்தில் என்ன கலர் என்று கேட்டதற்கு நேவி புளூ மாதிரி உள்ளது என கூறுகிறார். மகசர்

எழுதும்போது டைரியின் உடைய கலரை எழுதினார்கள். நான் படித்துப் பார்த்து தான் கையெழுத்து போட்டேன்.

அ.சா.ஆ.41 மகசரில் டைரியின் கலர் எழுதப்பட்டுள்ளதா என்றால் 2015 டைரி என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் எந்த வண்ணமும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2014 வருடத்திய டைரியை பொறுத்து Save green என்று எழுதியுள்ளது.

CBCID போலிசார் என்னை விசாரித்தபோது, டைரியின் நிறம் பற்றி சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. CBCID போலிசாரிடம் நான் எத்தனை சிம் கார்டு சொன்னேன் என்றால் நான் சொல்ல சொல்ல அவர் எதுவும் எழுதவில்லை. அவர் (அதிகாரி) எடுத்து காட்டியதை நான் பார்த்தேன்.

என்னுடைய முதல் விசாரணையில் சிவப்பு செல்போன் எடுத்து சிம் கழட்டினார்கள் என்று சொல்லி உள்ளதை, CBCID போலிசார் விசாரணையில் நான் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. சிவப்பு செல்போனில் Wootel என்பது எந்த மாடல் என்று மகசரில் குறிப்பிடவில்லை. ஒவ்வொரு செல்போனுக்கும் IMEI நெம்பர் இருக்கும் என்றும், அதை அ.சா.ஆ.43 ல் குறிப்பிட்டுள்ளார்களா என்றால் இல்லை.

மகசரில் 6 வது காலத்தில் 4 வது அயிட்டத்தில் Wootel செல்போன் என்பதில் சிம்கார்டு என்று எழுதி ஒன்று என உள்ளது. அ.சா.ஆ.41 மகசரில் 6 வது காலத்தில் 4 வது அயிட்டத்தில் சிம்கார்டு எத்தனை போட்டுள்ளது என்றால் each என்று சாட்சி சொன்னார்.

அதனை அடுத்து ஆவணத்தை கொடுத்து பார்த்து 1 என்று உள்ளது என்று சொன்னார்.

சிவப்பு நிற செல்போன் மற்றும் அதில் இருந்த சிம்கார்டு 2, ஜாய் மெமரி கார்டு ஒன்று, வோடோபோன் சிம்கார்டு 2, ஏர்டெல் சிம்கார்டு 2 அப்படி என்று நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன். என்ன மெமரி கார்டு என்றால் என்ன மெமரி கார்டு என்று எனக்கு நினைவில்லை. மெமரி கார்டு சம்மந்தப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியாது.

அ.சா.ஆ.41 மகசரில் சிம்கார்டின் நெம்பர் எழுதப்பட்டுள்ளதா என்றால் நெம்பர் எழுதப்படவில்லை. சிம்கார்டுகள் தனித்தனியாக இருந்ததா, ஏதாவது இன்ஸ்ட்ருமென்ட்டில் போட்டு இருந்ததா என்றால் அதிகாரி டேபிளின் மேல் வைத்தார். எங்கிருந்து எடுத்தார் என தெரியாது என்று சொன்ன பின்னர் மீண்டும் டேபிளின் மீது இருந்து எடுத்தார் என்று சாட்சி சொல்கிறார்.

அ.சா.ஆ.41 மகசரில் 6 வது காலத்தில் சப் டிவிசன் 7 ல் பென் டிரைவ் கலர் எழுதவில்லை. இன்னொன்று பென் டிரைவ் இல்லை என்றால் சரியல்ல. சாட்சியிடம் வழக்கு கோப்பில் இருந்ததை மேற்படி சா.பொ.வாக குறியிடப்பட்டதை மஞ்சள் கலரில் உள்ளதை சாட்சியிடம் காட்டி பென் டிரைவ் இல்லை என்று கேட்டு வினவியபோது சாட்சி அதை பார்த்து அதை கம்ப்யூட்டரில் போட்டால் அதில் உள்ள விவரம் தெரியும் என்றும், சாட்சி அதை பார்த்து பென் டிரைவ் என கூறுகிறார்.

பச்சை கலர் டைரியின் சைசை பொறுத்து மகசரில் எழுதவில்லை. நேவி புளூ அட்டை போட்ட டைரியின் சைசும் எழுதவில்லை. நோட் பேடின் கலரை பற்றி மகசரில் குறிப்பிடவில்லை.

மேற்படி ஆவணங்களை என் முன்னிலையில் தான் எடுத்தார்கள் என்று மகசரில் சரியாக சொல்லவில்லை என்றும், அதை பொறுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 பேப்பர்கள் என்று சொல்லும் நிலையில் அது என்ன பேப்பர் என்றால் A4 சைஸ் ஆகும். அதில் எழுதியிருந்ததா என்றால் கையால் எழுதப்பட்டது. சிம்கார்டு எங்கிருந்து எடுத்தார்கள், யாருடையது என்ற எந்த விவரமும் மகசரில் இல்லை என்றாலும், அது எதிரிகளுக்கு சம்மந்தம் இல்லை என்றும், நான் சரியாக புரிந்துக் கொள்ளாமல் மகசரில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வருவாய் ஆய்வாளராக உள்ளேன். R.I. manual உள்ளது. காவல்துறையில் என்னை அழைத்தது குறித்து தாசில்தாருக்கு கடிதம் வந்தது. அதை manual–ல் பதிவிட்டு செல்லவேண்டும் என்றால் தாசில்தார் சொன்னதில் பேரில் காவல் நிலையத்திற்கு சென்றேன். எனக்கு manual பதிவேடு கிடையாது. நான் manual லில் பதிவிட்டு தான் மற்ற அரசு சார்ந்த பணிகளுக்கு செல்லவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

தாசில்தார் என்னிடம், ஏதோ ஒரு வழக்கு சம்மந்தமாக வீட்டு சோதனை செய்கிறார்கள், நீங்கள் போங்கள் என்று சொன்னார். அப்போது எனக்கு வழக்கின் குற்ற எண் தெரியாது. அங்கு போன பின்னர் டி.எஸ்.பி. என்னிடம் சொன்னார். தாசில்தார் அலுவலகத்திலிருந்து வரும்போது வழக்கு பற்றி எனக்கு தெரியாது.

வருவாய் ஆய்வாளருக்கு வருகை பதிவேடு இல்லை. DSP, என்னிடம் கு.எண்.5/2015 என்று சொன்னார். மற்ற குற்ற எண்ணை பற்றி என்னிடம் சொல்லவில்லை. நான் வேலூர் வடக்கு வருவாய் ஆய்வாளர். என்னுடைய அலுவலகம் உள்ள வேலூர் வடக்கில் வேலூர் வடக்கு வி.எ.ஒ. வருவார். நான் மட்டும் தான் DSP அலுவலகத்திற்கு வந்தேன் என்றால் என்னுடன், பென்னாத்தூர் வி.எ.ஒ.வும் வந்தார்.

தாசில்தார் அளித்த சுற்றறிக்கையில் பென்னாத்தூர் வி.எ.ஒ.வுடன் சேர்ந்து நான் போகவேண்டும் என குறிப்பிட்டு அளித்து இருந்தார். ஏரியாவை பொறுத்து யாருக்கு நன்றாக தெரியும் என்றால் அதாவது பென்னாத்துர் வி.எ.ஒ.க்கு தெரியுமா அல்லது வேலூர் வடக்கு விஎஒ.க்கு தெரியுமா என்றால் சாட்சியாக போகின்றவர்கள் ஏரியாவை பற்றி தெரிந்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

என்னுடைய எல்லைக்குட்பட்டு வேலூர் வடக்கு வி.எ.ஒ. மட்டும் தான் வருவார். விதியின் அடிப்படையின்படி வேலூர் வடக்கு வி.எ.ஒ. தான் வரமுடியும் என்றால் சரிதான். வருவாய் துறையின் விதிமுறையின்படி வேலூர் வடக்கு வி.எ.ஒ.வுடன் தான் நான் செல்ல முடியும் என்றால் என்னுடைய மேலதிகாரி என்ன உத்தரவு வழங்குகிறாரோ அதை பின்பற்றுவது என்னுடைய கடமையாகும்.

பள்ளிகொண்டா வி.எ.ஒ. அலுவலகம் சென்று அந்த இடத்தை பற்றி தெரிந்துக் கொண்டு தான் நான் வரவேண்டும் என்றால் பள்ளிகொண்டா வி.எ.ஒ.வுக்கோ, வருவாய் ஆய்வாளருக்கோ நான் DSP இடம் சென்றது தெரியாது. வருவாய் துறையை, காவல்துறை கன்ட்ரோல் செய்ய முடியாது என்றால் தாசில்தார் சொன்னதின்பேரில் நான் சென்றேன்.

பள்ளிகொண்டாவில் உள்ள வீடு மற்றும் அதன் எண்கள் தெரிந்துக் கொள்ளவேண்டும் என்றால் பள்ளிகொண்டா வி.எ.ஒ.வை பார்த்து தெரிந்துக் கொண்டிருக்கவேண்டும் என்றால் நான் சென்றது யாருக்கும் இன்று வரை தெரியாது.

க.எண்.2/2015 என்பது காவலர் குடியிருப்பு கிடையாது என்றாலும், காலியிடமாகத்தான் இருந்தது என்றாலும் சரியல்ல. காவலர் குடியிருப்பை தற்போது தான் புதியதாக கட்டியுள்ளார்கள் என்றாலும், 2015 ல் காவலர் குடியிருப்பு கிடையாது என்றால் சரியல்ல. குடியிருப்பு என்று வந்தால் வீட்டு வரி வரும் என்றால் சரிதான்.

க.எண்.2/2015 குடியிருப்பு சம்மந்தமாக வீட்டு வரி ரசீதினை நான் வருவாய் ஆய்வாளர் என்ற முறையில் DSP அலுவலகத்தில் சமர்ப்பித்தேனா என்றால் என்னை சாட்சிக்காகத்தான் அழைத்தார்கள். போலிசார் 10 ஆவணங்களை கைப்பற்றிய பிறகு பேக் செய்து, சீல் வைத்தார்களா என்றால் நான் அதை கவனிக்கவில்லை. நான் கவனிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

முத்துக்குமரன் என்பவர் அந்த இடத்தை காண்பித்தார் என தவறாக நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாசில்தார், என்னிடம் ஓட்டேரி CBCID அலுவலகத்திற்கு என்னை செல்ல சொன்னார். எனக்கு அளித்த authorisation letter CBCID அதிகாரியிடம் நான் கொடுத்தேன். அதை நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் வேலூரை சேர்ந்த வருவாய் ஆய்வாளர் என்பதால், வேலூரை சேர்ந்த வி.எ.ஒ. ஐ அழைத்துச் கொண்டு வேலூரை சேர்ந்த சரகத்தில் தான் ஆய்வு செய்ய இயலும் என்றால் சரியல்ல. பள்ளிகொண்டாவில் இருக்கக்கூடிய வி.எ.ஒ. அலுவலகம் சென்று விஷயங்களை தெரிந்துக் கொண்டு தான் நான் சென்றிருக்கவேண்டும் என்றால் அவ்வாறு தேவையில்லை.

குடியிருப்பில் இருந்து DSP கைப்பற்றியதாக சொல்லும் ஆவணங்களை பற்றி நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொருட்களை கைப்பற்றும்போது சீல் வைக்கப்பட்டிருக்கவேண்டும் என்றாலும், சீல் வைக்கப்படாமல் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. CBCID நான், பென்னாத்தூர் வி.எ.ஒ. ஆகியோர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்களை தயாரித்தோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல், நான் சொன்ன நேரத்தில்,. இடத்தில் மகசர் தயார் செய்யப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

கைப்பற்றுதல் மகசரில், பள்ளிகொண்டா கா.நி. கு.எண்.158/2015 பிரிவு 176 குவிமுச என்பது பதியப்பட்டிருக்கவேண்டும் என்றாலும், அப்படி இல்லாமல் CBCID யின் கு.எண்.5/2015 மட்டும் பதியப்பட்டு இருப்பதாலும், இவை அனைத்தும் என் முன்னிலையில் காவல் நிலைய விதிக்கு அப்பாற்பட்டு, ஒரு வெள்ளை பேப்பரில் என்னிடம் கையெழுத்து பெற்று, தயாரிக்கப்பட்டு, பொருட்கள் அனைத்தும் ஜோடனை செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய மாதாந்திர அறிக்கையினை போலிஸ் அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் அவர் கேட்கவில்லை, அதனால் நான் கொடுக்கவில்லை. என்னுடைய மாதாந்திர அறிக்கையில் விவரம் குறிப்பிட்டுள்ளேன்.

வருவாய் சம்மந்தப்பட்ட அனைத்து சான்றிதழ்களுக்ும் நான் தமிழில் கையொப்பம் இடுவேன். ஏனையவை நான் ஆங்கிலத்தில் கையொப்பம் இடுவேன். எந்த கையெழுத்து போட்டாலும் நான் சீல் போடுவது வழக்கம்.

அ.சா.ஆ.41 கைப்பற்றுதல் மகசரில் நான் கையெழுத்து போட்டு, அதன் கீழே வேலூர் வடக்கு என்று போட்டுள்ளேன்.

**மறுவிசாரணை**

மணி மற்றும் முனிராஜ் எழுதிக் கொடுத்த ஆவணத்தை பார்த்தால் அடையாளம் காட்ட இயலும்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.24 17:38:34 +0530